[*2016 ஆகஸ்ட் 31*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1323—திரு. என்.ஜி. பார்த்திபன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், காவேரிப்பாக்கம் பேரூராட்சியிலுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னாளாம், பொன்னாளாம், பொலிவு தரும் இந்நாள் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் புகழும் நாள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் 100-வது நாள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். 100 நாள் சாதனைகள்; அது 100 ஆண்டு சரித்திரங்கள். ஆம்; அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய வெற்றிச் சரித்திரங்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றிச் சரித்திரங்கள் இன்னும் பல நூறு நாட்கள், 100 ஆண்டுகள் தொடரும், நிலைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நன்னாளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், சமீபத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதிய தாலுகாவாக உருவாக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய கொள்கை முடிவுக்கேற்ப, நெமிலி வட்டத்திலுள்ள ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தாலுகா மருத்துவமனையாக

2016 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சார்பில் தரம் உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.*

திரு. என்.ஜி. பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையை இந்தியாவிற்கே வழிகாட்டும் துறையாக மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவருக்கெல்லாம் மருத்துவராக, அன்பின் இருப்பிடமாய், அறிவின் உறைவிடமாய், ஆற்றலின் அமைவிடமாய், அஞ்சாமையின் முகவரியாய், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய், மகத்தான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்த மகத்துவம், (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமைகள் நிறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது 4 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாகச் செயல்பட்டுவருகிறது. இந்தப் பேரூராட்சி சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. இந்தப் பகுதியில் பெருமளவில் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, இந்தப் பகுதியில் ஓர் அரசு மருத்துவமனையை ஏற்படுத்தினால், பொது மக்களும், அந்தப் பகுதியில் இருக்கின்ற பெரும்பான்மையான கிராமங்களைச் சேர்ந்த மக்களும் பயன்பெறுவார்கள் என்பதால், இந்தப் பகுதியில் ஓர் அரசு மருத்துவமனையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதிய தாலுகாக்கள்*

உருவாக்கப்படுகின்றபோது, அந்த தாலுகாவிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது வட்டம் சாரா மருத்துவமனையோ தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில், நெமிலி புதிய தாலுகாவாக மாண்புமிகு அம்மா அவர்களால் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பில் கடந்த 5 ஆண்டுகளில் 14 புதிய தாலுகா மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து இப்பொழுது 39 புதிய தாலுகா மருத்துவமனைகள் தொடங்க உரிய கருத்துருக்கள் பெறப்பட்டு, அரசின் நடவடிக்கையில் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கூடுதலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.

முற்பகல் 10-45

திரு. என்.ஜி. பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் நெமிலி தாலுகாவிற்குரிய தாலுகா மருத்துவமனையை அங்கே ஏற்படுத்தித் தருவேன் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி, காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அதை அந்தப் பேரூராட்சியின் சார்பில் வழங்குவதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்து, நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 31]

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மல்லிநாயனபள்ளி ஊராட்சி, மல்லிநாயனபள்ளியிலே ஒரு தாய், சேய் நல விடுதி 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை தாய், சேய் நல விடுதியாகவே இருக்கிறது. மல்லிநாயனபள்ளியைச் சுற்றி சுமார் 20 கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அங்கிருந்து ஏதாவது அவசர சிகிச்சைக்காக செல்ல வேண்டும் என்று சொன்னால், 20 கி.மீ. தொலைவிலுள்ள கிருஷ்ணகிரிக்குத்தான் வந்தாக வேண்டும். இல்லையென்று சொன்னால், 15 கி.மீ. தொலைவிலுள்ள மேச்சகாளாச்சின்னம்பள்ளிக்குப் போக வேண்டும். அது, கிருஷ்ணகிரி-குப்பம் மெயின் ரோடில் இருக்கிறது. ஆகவே, அந்த தாய் சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவாரா என தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாய், சேய் நல விடுதிகளை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துகின்ற கொள்கை இல்லை. உரிய விதிமுறைகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் செய்வதாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடங்களிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குவது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

சிற்றுந்து

***3781—திரு. ப. சத்திய நாராயணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—